செய்தி வெளியீடு எண் : 2346 நாள் : 24.11.2023

# தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

## செய்தி வெளியீடு

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (24.11.2023) சென்னை தலைமைச் செயலகத்தில் ரூபாய்.37.22 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் உடற்பயிற்சி கூடங்களைத் திறந்து வைத்தார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் இயங்கி வந்த ஆண்கள் மற்றும் பெண்களுக்கான உடற்பயிற்சி கூடங்களை புதுப்பித்திடவும் பழுதடைந்த தரைப்பலகை, மின் சாதனங்கள், கழிவறை சாதனங்கள், உடற்பயிற்சி உபகரணங்களை சீரமைத்து நவீனப்படுத்திடவும் மற்றும் கூடுதலாக டேபிள் டென்னிஸ் மேடை ஏற்படுத்திடவும் தலைமைச் செயலக அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் கோரிக்கை விடுத்தனர்.

அதனடிப்படையில் ஆண்கள் உடற்பயிற்சி கூடம் ரூபாய்.17.8 இலட்சம் மதிப்பீட்டிலும், பெண்கள் உடற்பயற்சி கூடம் ரூபாய்.14.58 இலட்சம் மதிப்பீட்டிலும் புதுப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் உடற்பயிற்சி உபகரணங்கள் சீரமைத்து நவீனப்படுத்துதல் மற்றும் பெண்கள் உடற்பயிற்சி கூடத்தில் புதிதாக டேபிள் டென்னிஸ் விளையாட வசதியாக டேபிள் டென்னிஸ் மேடை அமைத்தல் ஆகிய பணிகள் ரூபாய்.4.84 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளது. இந்த மேம்படுத்தப்பட்ட உடற்பயிற்சி கூடங்களை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (24.11.2023) திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமை செயலாளர் முனைவர். அதுல்யா மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு. ஜெ. மேகநாத ரெட்டி, இ.ஆ.ப, தமிழ்நாடு தலைமைச் செயலகச் சங்கத் தலைவர் கு. வெங்கடேசன், செயலாளர் திரு. சு. ஹரிசங்கர், இணைச் செயலாளர் (பொது) திரு. இரா. லெனின், இணைச் செயலாளர் [வி (ம) ப] திரு. அ. ஜீவன் மற்றும் பொருளாளர் திரு. சே. பிரபா ஆகியோர் உட்பட அரசு அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in